**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 8-ஆம் நாள் புதன் கிழமை**

**Tr.O.P. No.183/2025**

**(TN CD 01-010689-2025)**

சங்கர், த/பெ. வேம்பன், வயது 50, வசிப்பிடம் கோ.கொத்தனூர் கிராமம், வரம்பனூர் அஞ்சல், வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம். .. மனுதாரர்

/எதிராக/

1. வீராயி, க/பெ. சௌந்தரராஜன், வயது 70,

2. சபீதா, க/பெ. வேம்பன், வயது 39

3. செல்லபாங்கி, க/பெ. வேம்பன், வயது 75

4. பிரசாந்த், த/பெ. சீனுவாசன், வயது 32

5. மோனிஷா, த/பெ. சீனுவாசன், வயது 24

மனுதாரர்கள் 1 முதல் 5 வரை உள்ளவர்கள் வசிப்பிடம் படுகளாநத்தம் கிராமம், விளாங்காட்டுர் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

6. அஞ்சலை, க/பெ. ராஜேஷ், வயது 45, வசிப்பிடம் கோ.மங்கலம் கிராமம், மணவாளநல்லூர் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

7. செந்தாமரை,க/பெ. மணிவேல்,வயது 43, வசிப்பிடம் கோ.மங்கலம் கிராமம், மணவாளநல்லூர் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

8. சுகந்தி, க/பெ. சிற்றரசன், வயது 40, வசிப்பிடம் கூத்தக்குடி கிராமம் மற்றும் அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

.. எதிர்மனுதாரர்கள்

விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.109/2025 உடன், விருத்தாசலம், கூடுதல் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.184/2024 என்ற வழக்கினை இணைத்து கூட்டு விசாரணை (Joint Trial) நடத்தவும், இம்மனுவின் செலவு தொகை மனுதாரருக்கு, 1,2 எதிர்மனுதாரர்கள் மூலம் கிடைத்திடும் வகைக்கும், இந்நீதிமன்றத்திற்கு யுக்தமாய் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் கிடைத்திடும் வகைக்கும் உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இம்மனு 25.10.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டு 14.11.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் நீதிமன்றக் கட்டணம் ரூ.50/- செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பு 06.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வாகியும், 1 முதல் 8 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1 முதல் 8 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

<u>**உத்தரவாணை**</u>

1. இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. விருத்தாசலம், கூடுதல் சார்பு நீதிபதி அவர்கள், அசல் வழக்கு எண்.184/2024-ஐ, விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3. விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிபதி அவர்கள், மேற்படி அசல் வழக்கு எண்.184/2024-ஐ பெற்று, விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.109/2025 என்ற வழக்குடன் இணைத்து கூட்டு விசாரணை நடத்தவும் (Joint Trial) உத்தரவிடப்படுகிறது.

4. செலவுத் தொகை இல்லை.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ஆம் நாள் என்னால் இடப்பட்டது.

SUBATHIRA DEVI G
Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.04.30 17:46:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

-------------------------
உத்தரவாணை
Tr.OP.No.183/2025
Dated.08.04.2026
--------------------------